SUPT
AD
JD
DIR

007163

DIRECTORATE OF TRIBAL WELFARE
09 AUG 2023
CHEPAUK, CHENNAI-5

G2

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியில் இருக்கும் போது காலமான அரசு ஊழியர் திரு. சி.ஜெயமணி என்பவரது மகன் திரு.ஜெ. வெங்கடேசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது - இளநிலை உதவியாளர் பதவியில் அவரது பணியினை வரன்முறை செய்தல்- ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-4(2))துறை

அரசாணை (ப) எண். 192

நாள்: 08.08. 2023
சோபகிருது ஆண்டு
ஆடி 23 - ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2054.
படிக்கப்பட்டது:-

1. பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதம் ந.க.எண்.ப.மே.எ 2/1972/2023, நாள்.05.04.2023.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.

************

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு, கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ், விழுப்புரம் மாவட்டம். வானூர் வட்டம், புளிச்சப்பள்ளம் அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் விடுதியில் காவலராக பணிபுரிந்து பணியிலிருக்கும் போது 03.08.2003 அன்று பணியிடைக் காலமான திரு. சி.ஜெயமணி என்பவரது மகன் திரு. ஜெ. வெங்கடேசன் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, 25.01.2022 முற்பகல் முதல் பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து, உரிய ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கோரியுள்ளார்.

(த.பி.பா)

2. மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு உரிய ஆவணங்களுடன் மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வரும், திரு. ஜெ. வெங்கடேசன் என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 25.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால் திரு. ஜெ. வெங்கடேசன் இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறைகளின் இசைவினை முறையே அதன் அ.சா.கு.எண்.4277/ட்டி/2023, நாள்.14.06.2023 மற்றும் அ.சா.கு.எண்.4976186/G.2/2023, நாள்.27.07.2023 -இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. லட்சுமி பிரியா,
அரசு செயலாளர்.

**பெறுநர் :**

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
திரு. ஜெ. வெங்கடேசன், இளநிலை உதவியாளர்,
பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை – 600 005.
(பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
மாவட்டக் கருவூல அலுவலர், சென்னை மாவட்டம்.
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 600 018 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-600 008

**நகல்:-**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. சென்னை-600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

1/9/23

பிரிவு அலுவலர்
3/8/2023